**05.12.2023.** CC. 207/2018 PW.2 Thiru. Satheesh

**கடந்த 15.09.2021 ம் தேதி** இந்நீதிமன்ற **முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருக்கும் நிலையில் இந்நீதிமன்ற Crl.M.P. No. 703/2022, dated 09.03.2022 ன் படி கு.வி.மு.ச 1973 பிரிவு 311 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மையானது கு.வி.மு.ச பிரிவு 317(1)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. இதற்கு முன்னர் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். சத்தியசீலன் என்ற நபர் என்னை கல்லால் தாக்கினாரா என்றால் இல்லை.

2. சத்திய சீலன் பெயர் எவ்வாறு தெரியுமென்றால் நாங்கள் விசாரித்து தெரிந்துகொண்டோம். சத்திய சீலன் கல் எடுத்து ஓங்கும்போது யார் யாரெல்லாம் தடுத்தார்கள் என்றால் ஜெகன் சந்திர குமார், மகேஷ்வரி தடுத்தார்கள். அந்த சமயயத்தில் நாங்கள் காரை விட்டு வெளியே நின்றோமா என்றால் அடி நடந்தபிறகு வெளியே வந்தோம்.

3. நாங்கள் ஓட்டி வந்த கார் ஏ.சி வாகனமா என்றால் ஆம் ஆனால் நாங்கள் ஏ.சி போடவில்லை. ஒரு கண்ணாடியை தவிர்த்து மற்ற கண்ணாடிகள் அடைக்கப்பட்டு இருந்தது. என் அப்பா எனக்கு நேர் எதிர் மூலையில் இருந்தார் என்றால் சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் கையை நீட்டி அடித்தால் கூட என் தந்தை மீது படுவதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல.

4. போலீசார் என்னை விசாரித்தார்கள். 28.10.2016 அன்றே விசாரித்தார்கள். பின்னர் மறுநாள் மண்டைகாடு காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். சம்பவத்திற்கு முன்னர் என் அப்பாவிற்கு பற்கள் சரியாகத்தான் இருந்தது என்று சொன்னால் சரிதான்.

5. எங்களது காரில் எந்தவித சேதமும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு சம்பவ இடமானது குளச்சல் காவல் நிலைய எல்லைக்குட்பட்டது என்றாலும் எனக்கு வேண்டிய நபர்கள் மண்டைக்காடு காவல் நிலையத்தில் இருந்ததால் அங்கு பதிய பட்டது என்று சொன்னால் சரியல்ல.

6. நாங்கள் வாகனத்தில் வேகமாக சென்று குற்றம் சுமத்தப்பட்ட நபரை இடித்து காயப்படுத்தி அதில் இருந்து தப்பிப்பதற்காக பொய்யாக வழக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு,

தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட

நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.